More than 60.000 persons have been protected against cholera since the outbreak. The Director of Public Health, Madras, has inspected the Infectious Diseases Hospital and the infected areas in Rayapuram area. The situation is being closely watched by the Government.

### IV.—ADJOURNMENT MOTION *RE*.

#### DAMAGE TO HOUSES ON ACCOUNT OF SEEPAGE WATER IN LOWER BHAVANI PROJECT AREA.

MR. SPEAKER : I have received from the hon. Member Sri K. R. Nallasivam notice of a motion to adjourn the House to discuss a matter of urgent public importance. Before I give my ruling in the matter I should like to hear the hon. Member and also the Hon. Minister concerned if he has anything to say on the motion.

SRI K. R. NALLASIVAM : சபாநாயகர் அவர்களே, இப்போது ஒரு 10-08 p.m.
வாரத்திற்கு முன்னால் ஈரோடு தாலுகாவில் சில இடங்களில் கீழ் பவானி தண்ணீர் செல்லும் பள்ளமான இடங்களில்—உள்ள வீடுகள் அநேகம் விழுந்துகொண்டிருக்கின்றன. நான் போய்ப் பார்த்தபோது பல வீடுகள் விழுந்துவிட்டன. இன்னும் விழுந்துகொண்டிருக்கின்றன என்று தகவல் வந்துகொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், இதே போல் தண்ணிர் வந்ததால் பல வீடுகள் விழுந்துபோயின. சுமார் 1,450 வீடுகள் விழுந்து போயின. அந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதித்தது. அப்படிக் கட்டிக்கொண்ட வீடுகள்கூட இப்பொழுது விழுந்துவிட்டன என்பதை இங்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். தண்ணீர் வரக்கூடிய காலங்களில் இந்த வீடுகள் திடீர் திடீரென்று விழுந்துவிடுகின்றன. தண்ணீர் நின்றுவிட்டால் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக பொடிந்துவிடுகின்றன. இதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடம் சொன்னோம். ஆனால் அவர்கள் எந்த விதமான நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள். முன்பு இந்த பிரதேசம் சமுதாய நலஅபிவிருத்தி திட்டப் பிரதேசத்தில் இருந்தது. அப்போது ஒருவருக்கு 200 ரூபாய் கடனாகவும் 100 ரூபாய் மான்யமாகவும் கொடுக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னால் கருக்கம்பாளையம் என்ற இடத்தில் நீர் கசிவு ஏற்பட்டது. இதை அதிகாரிகளிடத்தில் சொன்னபோது அவர்கள் அங்கு வந்து பார்த்தார்களே தவிர வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு அதற்குத் தேவையான பண வசதியும் கிடையாது. இதற்கு முன்னால் வீடு கட்டிக் கொடுப்பதற்காகவே ஒரு அதிகாரி, 'Development Deputy Collector இருந்தார். ஆனால் இப்போது அம்மாதிரி தனி அதிகாரி ஒருவரும் இல்லை. ஹரிஜனங்களும் ஏழை விவசாயிகளும் பள்ளத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தவர்களும் வீடுகள் இழந்து நடுத் தெருவில் இருக்கிறார்கள். ஒன்று அல்லது இரண்டு வீடுகள் இல்லை. சுமார் 1,200 வீடுகள் இந்தப் பாசனப் பிரதேசத்தில் விழுந்துவிட்டன என்பதை மந்திரி அவர்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

முன்பு சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்தில் இருந்த பொழுது 15 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஆனால் இப்போது தேசீய விஸ்தரிப்புப் பிரதேசத்தில் 50,000 ரூபாய்கூட மொத்தமாக செலவழிக்கப்படுவதில்லை. ஆகவே இதற்காக விசேஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேட்டூர் கால்வாய் பிரதேசத்திலும் இது போன்ற நிலைமைதான்.